★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 83[illegible]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 13உ புதன் (25—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 14உ வியாழன் (26—4—56) [இதழ் 268

ரூ. 4,50,00,000 செலவில் வடக்கில் ஒரு தொழிற்சாலை எழுகிறது!

2,500 பேர்களுக்கு வேலை கிடைக்குமாம்

காசியிலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில், இரயில் 'எஞ்சின்'கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலைக்கு குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் கால்கோள் விழா ஆற்றியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

வெட்டி நம்பிக்கையும் வீண் செலவும் விளைவாகுமாம்!

வங்க—பீகார் இணைப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி

மக்கள் சபை உறுப்பினர் கைது

புதுடில்லி, ஏப். 24—

வங்கம்—பீகார் இணைப்பை எதிர்த்து நடைபெறும் கிளர்ச்சியை ஒட்டி துஷார் சாட்டர்ஜி என்ற மக்கள் சபை உறுப்பினர் கல்கத்தாவில் கைது செய்யப்பட்டிருப்பதாக, அந்த நகர போலீஸ் அதிகாரி தமக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார் என்று மக்கள் சபைத் தலைவர், சபையில் தெரிவித்திருக்கிறார்.

சிப்பந்திகளைக் குறைக்கச் சிபாரிசு!

புதுடில்லி, ஏப். 24—

அரசியலாரின் வெவ்வேறு இலாகாக்களில் சிப்பந்திகளைக் குறைத்து ரூ. 1,35,00,000 சிக்கனம் செய்யும்படி தனிசீரமைப்பு 'யூனிட்' சிபாரிசு செய்துள்ளதெனத் தெரிகிறது.

9 இலாகாக்களை சீரமைப்பு 'யூனிட்' இதுவரை பரிசீலித்து 14 சதவிகிதம் தொழிலாளர்களைக் குறைக்குமாறு கூறியுள்ளதாம்.

மக்கள் சபையை மராட்டியர் 'முற்றுகை' யிடுகின்றனர்!

ஆர்ப்பாட்டம் செய்த 41 பேர் கைது

புதுடில்லி, ஏப். 24—

மராட்டியர்கள் தங்களின் உரிமைப் போராட்டக் களத்தை டெல்லிக்கு மாற்றியிருக்கிறார்கள்!

'பம்பாய் மராட்டியருடையதே' என்ற நியாயத்தை நிலை நாட்ட மராட்டிய வீரர்கள், புதுடில்லி மக்கள் சபையை முற்றுகையிடப் போவதாக ஏற்கனவே செய்தி வந்திருந்தது.

இன்று காலை மராட்டிய வீரர்கள், முன்பே அறிவித்தபடி மக்கள் சபை முன்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டம் நடத்திய தொண்டர்கள் அரவம் செய்யாமல், யாரும் அறியாமல், 'போலீஸ் அனுமதியின்றி நுழையக்கூடாது' என்று தடைவிதிக்கப்பட்டிருந்த இடங்களில், கூடிவிட்டிருக்கின்றனர்.

பின்னர், எச். பி. பைதே என்பவரின் தலைமையில், சுமார் 20 தொண்டர்கள், உரிமைக் குரல் எழுப்பியவண்ணம் சபையின் மற்றொரு வாயிற்புறம் வழியாக ஊர்வலமாகப் புறப்பட்டனர்; உடன் அவர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

'பம்பாய் மராட்டியருடையதே,' 'பம்பாயை விடமாட்டோம்' என்று கோஷித்துக்கொண்டு, பல்வேறு படைவரிசைகள் — ஐந்து பேர், எட்டு பேர் என்று — மக்கள் சபைக்குள் நுழைய முற்பட்டன; அந்தத் தொண்டர்களையும் போலீசார் சிறை பிடித்திருக்கின்றனர்.

பெல்காமைச் சேர்ந்த சோமாஜி என்ற சட்டசபை உறுப்பினர் உட்பட மொத்தம் 41 பேர்

(4-ம் பக்கம் பார்க்க)

மத்திய—மாகாண ஆட்சி அமைப்புகளுக்கிடை மண்டல ஏற்பாடு கூடாதாம்!

அதிகாரமில்லாத மண்டல அமைப்பால் ஆகப்போவது ஒன்றுமில்லையாம்!

மண்டல மன்ற ஏற்பாடு பற்றி உ. பி. முதலமைச்சர்

"மாகாண சீர்திருத்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கும் மண்டல மன்றங்கள் அதிகாரமில்லாத அமைப்புகளாகும். அவை நிறைவேற்றும் முடிவுகள், சட்டத் தன்மையற்ற வெறும் சிபாரிசுகளே யாகும்.

"அவ்வமைப்புகளால் வீண் நம்பிக்கையும், வெட்டிப் பணச் செலவுந்தான் கைகண்ட பலன்களாகும்.

"எதிர்காலத்தில் பலவித ஏமாற்றங்களின் உறைவிடமாக அம்மன்றங்கள் இருக்கும்"

இவ்வாறு, உத்திரபிரதேச முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்த் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

எவரும் எதிர்பாராவகையில், உத்திரபிரதேச சட்டசபையில் மண்டல மன்ற அமைப்பு ஏற்பாட்டை, முதலமைச்சர் இத்திங்கள் 9-ந் தேதி எதிர்த்துப் பேசினார்.

அவர் மேலும் இது பற்றி விளக்கிக் கூறியிருப்பதாவது :—

"மண்டல மன்ற அமைப்பு ஏற்பாட்டை உருவாக்கினவர்கள், மத்திய அரசாங்கத்திற்கும்— மாகாண அரசாங்கங்களுக்கும் இடையில் இதுபோன்ற அமைப்பு ஏன் இருந்தாகவேண்டும் என்பதற்குரிய விளக்கத்தைக் கூறத் தவறிவிட்டனர். மத்தியில் ஒரே அரசாங்க அமைப்பாகவாவது அல்லது இப்பொழுது உள்ள அமைப்புகளின்படியாவது—அதாவது, இப்பொழுது அமைந்திருப்பதுபோல் ஒரு மத்திய ஆட்சியும், தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இனங்களில் முழு அதிகாரம் செலுத்தும் உரிமை கொண்டுள்ள மாகாண ஆட்சிகளுடனும் கூடிய அமைப்பு செயல்பட்டு வரவேண்டும்.

"இப்பொழுது செயல்பட்டு வரும் ஏற்பாட்டிலிருந்து விலகிச் செல்ல விரும்பினால், ஒன்று, மத்திய ஆட்சி அமைப்பை தனிப் பெரும் ஆட்சியாக மாற்றிவிட வேண்டும்; அல்லது, மாகாண ஆட்சி அமைப்பின் அதிகாரத்தை விரிவுடையதாக ஆக்கவேண்டும். மண்டல மன்ற ஏற்பாடு, இந்த இரண்டில் எந்த ஒன்றிலும் சேர்ந்ததாக இல்லை."

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

"ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு ஒத்த முடிவு காண்பது அவசியமாகும். அதற்காக, சம்பந்தப்பட்ட மாகாணங்களில் முதல் மந்திரிகளைக்கொண்டோ அல்லது மந்திரிகளைக் கொண்டோ, குறிப்பிட்ட பிரச்சினைகளில் உடன்பாடு காண்பதற்காக ஒரு கூட்டுக் குழுவை நியமித்துக் கொள்வது, மண்டல மன்ற ஏற்பாட்டைக் காட்டிலும் மேலானதாகும்.

"அபிவிருத்தித் துறையிலும் கூட, நிரந்தர அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் நிரந்தர மண்டல மன்ற ஏற்பாடு, வெறும் ஐந்தாவது சகடைப் போன்றதேயாகும். மண்டல மன்றங்களில் அங்கம் பெற்றுள்ள அமைச்சர்களோ, தம் தம் சட்டசபைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். மண்டல மன்றங்களோ தம் கூட்டுமான சாட்சிக்கன்றி, வேறு எதற்கும் கட்டுப்பட வேண்டிய நிலையில் இல்லாத தன்னுரிமையுடன் விளங்குவதாகும்.

"மண்டல மன்றங்களுக்கு மத்திய மந்திரிகள் தலைவர்களாக இருப்பது அவசியமற்றது. அதற்கு மாகாண முதலமைச்சர்களே தலைமை வகிக்கவேண்டும். மத்திய அமைச்சர்களைத் தலைவர்களாகப் போடுவதின் மூலம், இவ்வேற்பாட்டை உருவாக்கினவர்கள், எதை சாதிக்க எண்ணி இருக்கிறார்களோ?"

புயல் சேதப் பகுதிகளில் கழகப் பணி

பொதுச்செயலாளர் ஆடைகள் வழங்கினர்

அதிராம்பட்டினம், ஏப். 25—

தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் வீசிய புயல் காரணமாக வீடு, உடைமைகளை இழந்தவர்கள் நிலை நாடு அறிந்ததே! திராவிட முன்னேற்றக் கழகம், சென்னையில் வீடு வீடாகச் சென்று ஆடைகள் திரட்டியும், நிதி வசூலித்தும் சேதப் பகுதிகளில் வினியோகிக்க ஏற்பாடு செய்தது. சென்னை பொதுக் கூட்டத்தில் அண்ணா அவர்களும், கழக வீரர்களும் பேசிய போது, கூட்ட அனுமதியாக, உபயோகப்படக்கூடிய ஆடை ஒன்று எனப் பெற்றுச் சேர்த்த 20,000-த்துக்கு மேற்பட்ட ஆடைகளை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்த மாதம் 19, 20 நாட்களில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வினியோகம் செய்தார். சுமார் 350 மைல்கள் ஒரு 'மோட்டார் வானில்' சுற்றுப்பிரயாணம் செய்து அந்த மக்கள் வதியும் சேரிகளுக்குச் சென்று அங்கு வயோதிகர்களுக்கு—குழந்தைகளுக்கு—பெண்களுக்கு எனப் பலருக்கும் ஆடைகள் வழங்கினர்.

தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ, பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ். பெத்தண்ணன், வை. சுப்பிரமணியம், கு. அடைக்கலம், ந. தருமலிங்கம், தஞ்சை நகர தி. மு. க. செயலாளர் பட்டு ஆகியோர் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டு ஆடைகள் வினியோகம் செய்தனர்.

19—4—56 அன்று காலை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திருத்துறைப்பூண்டி வந்து சேர்ந்தார்.

ஒரு 'மோட்டார் வானில்' தி. மு. கழகம் சேர்த்து வைத்திருந்த புதியதும், பழையதுமான இருபதாயிரம் ஆடைகளை எடுத்துக் கொண்டு வழிநெடுக, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகிற சேரிகளில் சென்று நேரிடையாகவே வினியோகித்தார்.

ஆங்காங்கு சேரி வாழ் மக்கள் உள்ளத்தில் களிப்பு பொங்க பொதுச் செயலாளரிடம் ஆடைகள் பெற்றுக் கொண்டு நன்றி கூறிய காட்சி, உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

சின்னஞ்சிறு குழந்தைகளுக்கான ஆடைகளும், வயோதிகர்களுக்கான கோட்டு, களும் இளைஞர்களுக்கான 'பாண்ட்'களும் முக்கியமாக வினியோகிக்கப்பட்டன. திருத்துறைப்பூண்டி நகரிலும் சேரிகளில் கணிசமான அளவுக்கு துணி வினியோகம் நடைபெற்றது.

20—4—56 அன்று காலை அதிராம்பட்டினம் சேரிவாழ் மக்களுக்கான ஆடைகள் அவ்வூர் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகப் பஞ்சாயத்து போர்டுக்கு அனுப்பப்பட்டிருக்கும் தோழர் மருதய்யனிடம் ஒப்படைக்கப்பட்டு வினியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை 10 மணியளவில் பட்டுக்கோட்டையின் மிக முக்கியமான சேரியில் துணி வழங்கப்பட்டது. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் சூழ்ந்து நின்று பொதுச்செயலா

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மாநில மாநாட்டில்!

உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் கருத்து விருந்து!

★

1. விடுதலைக் கிளர்ச்சிகள்
2. உரிமைக் கிளர்ச்சிகள்
3. தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்
4. தனிநாடு அமைப்பும்—பொருளாதார வசதிகளும்
5. தொழிற் புரட்சி
6. மொழிப் பிரச்சினை
7. திராவிடத்தின் உலகத் தொடர்புகள்
8. தாய்க்குல வரலாறு
9. கலையில் கருத்துப் புரட்சிகள்
10. வரலாற்றில் நாம்
11. புத்தர் நெறி
12. உலகைத் திருத்திய உத்தமர்கள்
13. தொழிலாளர் பிரச்சினை
14. இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25—4—'56 புதன்

தமிழ் ஆசிரியர்கள் பதில்

சென்னை மாகாண தமிழ் ஆசிரியர்களின் மூன்றாவது மாநாடு தஞ்சையில் மூன்று தினங்களுக்கு முன் நடைபெற்றிருக்கிறது. அம்மாநாட்டைத் திறந்துவைத்தவர் நமது முதலமைச்சர் காமராசர் அவர்களேயாவர்.

தமிழாசிரியர்களின் தேவை என்ன, தமிழ் வளர்க்க அவர்கள் கூறும் கருத்து யாது; விஞ்ஞான நூல்களை தமிழ் மக்கள் உணரச் செய்ய அவர்கள் காட்டும் மார்க்கம் என்ன, என்பனபோன்ற இன்றியமையா விஷயங்களை எல்லாம் முன் கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கான பரிகாரங்களைக் கூறி சாத்தியமானவைகளை உடனடியாக நிறைவேற்றஅரசாங்கச்சார்பில் அறிவிக்கவேண்டியதுதான், நாடாளும் பொறுப்பில் உள்ள ஒருவரின் நீங்காக் கடமையாக இருக்கவேண்டும். அக்கடமையை உணராது அல்லது உணர்ந்தும் உணராததுபோல் அம்மாநாட்டுக்குச் சென்று, காங்கிரஸ் கட்சியின் விசித்திர அரசியல் போக்கைக் குறித்து சண்டப்பிரசண்டம் செய்யும் முதலமைச்சரை, ஆட்சியிலிருந்தும் பொறுப்புணராத ஒரு அமைச்சர் என்றுதான் அம்மாநாட்டினர் எண்ணிக்கொள்வர்.

தமிழ் ஆசிரியர்கள் மாநாட்டிற்குத் தலைவரான டாக்டர் சிதம்பரநாதனுர் அவர்கள், தமிழ் ஆசிரியர்களின் தொகையைக் கூட்டுவதற்காக, மேலும் புலவர் கல்லூரிகளைத் திறக்க வேண்டும் என்றும், தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை அளிக்கவேண்டும் என்றும் கோரி இருக்கிறார். அதுவுமன்றி, தமிழ் ஆசிரியர்கள் ஊதியத்தை, மற்ற ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதிய அளவிற்குச் சமமானதாக ஆக்கவேண்டும் எனவும் மாநாட்டுத் தலைவர் வேண்டிக்கொண்டு உள்ளார்.

தலைவரின் கோரிக்கைகள் நியாயமானதேயாகும். அக்கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற அரசாங்கம் எந்த அளவு சித்தமாக இருக்கிறது என்ற உண்மையை, மாநாட்டில் கலந்துகொண்ட முதலமைச்சரிடமிருந்து அறிந்துகொள்வதற்கு, அங்கிருந்த தமிழாசிரியர்கள் ஆவலாக இருந்தும் இருப்பர். அவர்கள் ஆவலை பூர்த்திச் செய்யும் வகையில்தான், முதலமைச்சரும், அக்கோரிக்கைகள்பற்றிய தமது கருத்தைக் கூறி இருக்க வேண்டியதும் கட்டாயமாகும்.

ஆனல் முதலமைச்சரோ, தமிழாசிரியர்களிடை தமது மேதா விலாசத்தையும், புத்தி கூர்மையையும் காட்டிக்கொள்வதிலேயே நாட்டம் செலுத்தி இருக்கிறார்.

"தமிழ் மொழியினிடத்தில் பற்று காட்டுங்கள் — அத்துடன் நில்லுங்கள் — மொழி வெறி கொள்ளாதீர்கள். பிற மொழிகளைப் பகைத்துக்கொள்ளாதீர்கள். அரசியல் அறிவு பெறுங்கள்; ஆனல், அரசியல் வாதிகளின் மயக்க உரைகளில் மயங்கிவிடாதீர்கள்" என்றெல்லாம் முதலமைச்சர், தமிழ் ஆசிரியர்களுக்கு 'அறிவுரை' அளித்து இருக்கிறார்.

'மொழிப் பற்று' என்றால் என்ன 'மொழி வெறி' என்றால் என்ன; இரண்டையும் பிரித்துப் பார்ப்பதற்கான வழிவகை என்ன என்பவற்றை விளக்கமாகக்கூறி, அதைக்கொண்டு இப்பொழுது தமிழாசிரியர்கள் செய்துவரும் பணி, 'தமிழ்ப் பற்று' என்ற வகையைச் சேர்ந்ததா அல்லது 'மொழி வெறி' என்ற வகையைச் சேர்ந்ததா என்பதையும் கண்டறிந்துக் கூறி இருக்க வேண்டியதும் முதலமைச்சரின் தலைசிறந்த கடமையாகும். அதனல், தமிழாசிரியர்களும் உண்மை அறிந்து, முதலமைச்சருக்கும் பிடித்தமானதைச் செய்யவும், பிடித்தமற்றதைக் கைவிடவும் முந்துவர். ஆனல், முதலமைச்சரோ, அதைச் செய்யத் தவறிவிட்டார்.

முலமைச்சர் சண்டப்பிரசண்டத்திற்கு மாறுக, தமிழாசிரியர் மாநாட்டில் முப்பது தீர்மானங்கள்வரை நிறைவேற்றப் பட்டு இருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையானத் தீர்மானங்கள், முதலமைச்சருக்கு அறவே எரிச்சல் தரக்கூடியவைகளாகும். ஆனலும், தமிழ் மக்களுக்கு மங்காப் புகழையும், சிறந்த வாழ்வையும் தேடித் தரக்கூடியவைகளாகும்.

"மொழிவழியில் மாகாணங்களை அமைக்க வேண்டும்.

"மொழி வகையிலும் பண்பாட்டுத் துறையிலும் தமிழ் நாட்டுப் பகுதியாக விளங்கும் பகுதிகளைச் சென்னை மாகாணத்துடன் இணைக்கப்படவேண்டும்.

(அதாவது திரு — கொச்சியில் விடுபட்டுப் போயிருக்கும் தமிழ்ப் பகுதிகளான தேவிகுளம்-பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின் சித்தூர், பாலக்காடு ஆகிய பகுதிகளை சென்னையுடன் இணைக்கவேண்டும்.)

"சென்னைக்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டும்.

"தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செயலாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கோள்ள வேண்டும்."

"மாவட்ட நூல் நிலைய நிர்வாகத்தில் தமிழாசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தரடும்."

மேற்குறிப்பிட்ட மூன்று தீர்மானங்களும் முதலமைச்சருக்கு மட்டுமேயல்லாது, காங்கிரஸ் மேலிடத்திற்குங்கூட எரிச்சல் தரக்கூடியதாகும்.

தெளிவாகக் கூற வேண்டுமானல்,தமிழ் ஆசிரியர் மாநாடு, காங்கிரஸ் ஆட்சியின்மீது, அதனுடைய தவருனப் போக்கிற்காகக் குற்றப் பத்திரிகை வாசித்துக் கண்டித்து இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழாசிரியர்கள், எதிர்காலத் தமிழ் சந்ததியினரின் மனப்போக்கை உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களாவர்.

எதிர்காலத்தில், தமிழ் மக்கள் எவ்வாறு செயல்படுவார்கள் என்பதற்குத் தமிழாசிரியர் மாநாட்டுத் தீர்மானம் ஓர் முன்னறிவிப்பாகும்.

தமிழாசிரியர்களில், பெரும்பான்மையினர், காங்கிரஸ் கட்சிப்பற்று உடையவர்கள். ஆழ்ந்த மதப்பற்றுக் கொண்டிருப்பவர்கள்.

அவர்களால் நடத்தப்பட்ட மாநாட்டில்தான், காங்கிரஸ் ஆட்சியின் போக்கு தவறுனது எனக் கூருமல் கூறி, கண்டிக்கப்படுகிறது.

நாட்டு மக்களின் கருத்து எவ்வாறு இருக்கிறது—எத்திசையை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்பதையும், பொதுவாக முதலமைச்சரும், குறிப்பாகத் தலைவீக்கம்கொண்டலையும் நிதி அமைச்சரும் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

தமிழாசிரியர்கள், தமிழ் மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியாளர் செய்துள்ள துரோகத்தையும், தமிழர்களின் உள்ளக்கிடக்கையையும், நயமாக ஆனல் உறுதியாகத் தெரிவித்திருப்பதற்காக நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். ஆசிரியர் மாநாட்டின் பதில், தக்க தருணத்தில் தரப்பட்டு இருப்பதால், அதற்குள்ள தகுதியும் தன்மையும் பல்லாயிரம் மடங்கு உயர்ந்துவிட்டிருக்கிறது. தருணம் அறிந்து, ஆட்சியாளர்களுக்கு பதில் தந்த, தமிழாசிரியர் பெருமக்களுக்கு எமது பாராட்டு.

ஐதராபாத்தில் ஒரு சர்க்கரை தொழிற்சாலை

ரூ. 1-கோடி மூலதனத்தில் அமைகிறது

ஐதராபாத் மாநிலத்தில் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில், ஒரு புதிய சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று துவங்கப்படும் என்று ஐதராபாத் மாநில நிதி மந்திரி விநாயகராவ் கோரத்கார் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தொழிற்சாலைக்கான மூலதனத்தில் ரூ. 20 லட்சம் வரை மாநில சர்க்கார் தருவர் என்றும், இதரவை பங்குகளாகப் பலரிடமிருந்து வசூலிக்கப்பட்டு கூட்டுறவு முறையில் தொழிற்சாலை இயங்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தினந்தோறும் 850 டன், கரும்பு அரைக்கக்கூடியதாக தொழிற்சாலை அமையுமாம்.

இதற்காக கோதாவரி நதியின் இடப்புறத்தில் உள்ள சுமார் 6,000 ஏகர் தரிசு நிலத்திற்குப் பாசன வசதி தந்து, கரும்பு பயிரிடவும் ஏற்பாடாம்.

தென்னட்டுக் குடிசைத் தொழிலுக்கு நெருக்கடி

விற்பனைவசதியின்மை தீப்பெட்டித் தொழிலை முடக்குகிறது

பல்லாயிரவர் பிழைப்பு என்னுவது?

சிவகாசி, ஏப் 24—

விற்பனை வசதிகள் இல்லாததனலும், உற்பத்தியான சரக்குகள் அதிகமாக அழிவின்றித் தேங்கிக் கிடப்பதனலும் சிவகாசி, சாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள குடிசைத் தொழிலான தீப்பெட்டி உற்பத்தித்தொழில் இன்று நலிவடைந்து வருகிறது. இத்தீப்பெட்டித் தொழில்களின் மூலமாக பல்லாயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வேலை செய்து வருகின்றனர.

இப்படி உற்பத்தியான சரக்குகள் விற்பனையின்றி அப்படியே தேங்கிக் கிடப்பதனல் தொழிலாளர்களுக்கு நான்தோறும் இரண்டு மணி நேரத்திற்குமேல் வேலை அளிக்க இத்தொழில் உரிமையாளர்களினல் முடியவில்லை. இதனல் இவ்வட்டாரத்திலுள்ள தொழில்களில் பெரும்பான்மையானவைகளில் உற்பத்தி அளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

குடிசைத் தொழிலான தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கு இன்று இரண்டு விதமான போட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன அவைகளாவன :—

இயந்திரங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற தீப்பெட்டிகளின் போட்டி (விம்கோ); உற்பத்தியான சரக்குகளை விற்பனை செய்ய கடன் வசதி கிடைக்கவில்லை.

தீப்பெட்டிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தியான சரக்குகளை விற்பனை செய்யவும் நிதி உதவி அளிக்க விற்பனைக்கான அமைப்பை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப் பற்றி மத்திய மாகாண அரசாங்கங்களிடம் இத்தீப்பெட்டித் தொழிலின் பிரதிநிதிகள் வற்புறுத்தியிருக்கின்றனர்.

ரூ. 10 இலட்சம் முதலீடு செய்து விற்பனை செய்வதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தும்படியான திட்டமொன்றை ஏற்கனவே இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசாங்கத்தினிடம் அளித்திருக்கின்றனர். இந்தப் பத்து இலட்சம் ரூபாயில் ஏழு இலட்சத்தை அரசாங்கம் செலுத்த வேண்டும்.

தீப்பெட்டித் தொழில் உரிமையாளருக்குத் தேவையான கடன் வசதிகளை அளித்து தீப்பெட்டிகள் விற்பனைக்கு இந்த அமைப்பை ஏற்பாடு செய்யவேண்டும்.

இயந்திரங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற தீப்பெட்டிகளின் போட்டியினல் மார்க்கெட்டுகளில் தங்களுடைய சரக்குகளை விற்பனை செய்வது குடிசைத் தொழிலின் சிறிய உரிமையாளர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. இதனல் இவர்களுடைய மூலதனம் இப்படி முடக்கப்பட்டு விடுகிறது. ஆகவே உற்பத்தியான சரக்குகளை விற்பனை செய்ய விற்பனைக்கான அமைப்பு ஒன்றை நிறுவினல் தங்களுடைய தொழில்களைத் தொடர்ந்து நடத்தவும், தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலையளிக்கவும் ; தீப்பெட்டித் தொழில் உரிமையாளர்களினு ் முடியும்.

சிங்கப்பூருக்கு முழு சுதந்திரம் கிடைப்பது சந்தேகம்?

குழுவினருக்குத் தோன்றியுள்ள ஐயப்பாடு

இலங்கைத் தேர்தல்கள், சைப்ரஸ் கிளர்ச்சிகள், ஜோர்டான் நிலைமைகள் எல்லாம் சிங்கப்பூருக்கு 1957-ம் ஆண்டிற்குள் முழு சுதந்திரம் வழங்குவதினின்றும் பிரிட்டனைத் தடுத்து விடுமோ?

இந்த ஐயப்பாடு, இங்கிலாந்து சென்றுள்ள சிங்கப்பூர் சுதந்திரத் தூதுக்குழுவினரின் உள்ளத்தைக் குடைவதாகக் கூறப்படுகிறது.

குழுவினர், பிரிட்டனில் சுதந்திரம் வழங்க ஒப்பந்தம் செய்து கொள்ளுவார்களேயானல், அவர்களின் சர்வதேசப் பாதுகாப்பிற்கு உதவுவதுபற்றி சிங்கப்பூர் சில உறுதிமொழிகளைத் தரமுடியும் என்றும் கருதுகின்றனராம்.

இலங்கை, சைப்ரஸ், ஜோர்டான் நிலைகள் பிரிட்டனுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கின்றனவாம் !

போலீஸ் வேலையில் பெண்கள் !

நிபந்தனைகள் குறித்து மந்திரி தகவல்

புதுடில்லி, ஏப். 21—

"போலீஸ் இலாகாவில் பெண்கள் இடம் பெற சில 'நிபந்தனை'கள் விதிக்கப்படுகின்றன.

"ஆண்கள் போலீசாராகப் பணியாற்ற 18 வயது நிரம்பியவர்களாயிருந்தால் போதும்; ஆனல், பெண்கள் 30 வயதானவர்களாயிருக்க வேண்டும்.

"ஆண்கள் குறைந்தபட்சம் ஆரம்பக் கல்வியாவது பெற்றிருக்க வேண்டும்; ஆனல், பெண்களோ இந்தி, உருது மொழி அறிவு பெற்றிருந்தால் போதுமானது.

"ஆண்களுக்கு உடற்கட்டு இப்படித்தான் இருக்கவேண்டும்— (அதாவது உயரம் குறைந்தபட்சம் இத்தனை அடி, மார்புச் சுற்றளவு இத்தனை அங்குலம்) என்று கணக்கிருக்கிறது; ஆனல், பெண்களுக்கு நல்ல உடற்கட்டு மட்டும் இருந்தால் போதும்,"

என்ற தகவல்களை டெல்லி உதவி மந்திரி பி. என். தத்தார் தோழர் வல்லத்தரசின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

சம்பள விகிதத்தில் ஆண்களுக்கும்—பெண்களுக்கும் எந்தவித வேறுபாடும் காட்டப்படுவதில்லை என்றும் தகவலளித்திருக்கிறார் அந்த மந்திரி.

'பஸ்களில் நிறபேதம் காட்டக்கூடாது'

அமெரிக்க நீதிமன்றம் தடை விதிக்கிறது

வாஷிங்டன், ஏப். 23—

அமெரிக்காவிலுள்ள 48 மாநிலங்களில் ஓடும் எந்தப் பஸ்களிலும் நிற பேதம் காட்டக்கூடாதென அமெரிக்க நீதிமன்றம் தடை விதித்துள்ளதெனத் தெரிகிறது.

ஒரு மாநிலத்திலிருந்து பிரிதொரு மாநிலத்திற்குச் செல்லும் பஸ்களில் நிறபேதம் கொள்ளக் கூடாதென பத்தாண்டுகளுக்கு முன்னர் நீதி மன்றம் தடைவிதித்திருந்ததாம்.

பஸ்களில் இனபேதம் மேற்கொள்வது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று ஒரு கீழ் நீதி மன்றம் வழங்கியத் தீர்ப்பை மாற்ற 'சுப்ரீம்' நீதி மன்றம் மறுத்துவிட்டதாம்.

குறைபடுகின்றனர் ?

லண்டன், ஏப். 23—

"பிரிட்டனில் எங்கள் இருவரையும் எல்லோரும் வரவேற்கவே இல்லை என்பதை நாலும் புல்கானினும் உணருகிறோம்." என்று, ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் குருஷ்சேவ் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினாராம் !

'எதிர்க் கட்சியினரை மதித்து நடக்கத் தெரிய வேண்டும்'

'அடக்கத்தோடு பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்'

நீதிக்கு வரலாறு கண்ட தமிழகத்தில் குற்றத்தைச் சுட்டிக் காட்டினால் மந்திரிகள் சீறுவானேன் ?'

சென்னை நிதி மந்திரியின் துடுக்குத்தனத்திற்கு பி. டி. இராசன் எம்.எல்.ஏ. சூடு !

23—4—56-ல், சென்னை--சேப்பாக்கத்தில், தோழமைக் கழகத்தைத் துவக்கிவைத்து, திரு. பி. டி. இராசன் அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது ; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

" தட்சிணைப் பிரதேசம் அமைந்தால், ஏதேதோ நன்மைகள் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். தமிழ் நாடு அமைந்தால்—தனியாக இருந்தால், அந்த நன்மைகள் பெற முடியாது போய்விடும் என்கிறார்களா? என்ன நன்மைகள் கிடைக்கும் என்பது நமக்கும் தெரிந்ததுதான் !

" தமிழ் நாடு சிறியதாக இருக்கிறது என்று இவர்கள் பேசுகிறார்கள்; நான் கேட்கிறேன் — இங்கிலாந்து என்ன பெரிய நாடா? உலகத்தில் பெரும் பகுதியைக் கட்டி ஆண்டுகொண்டிருந்ததே, அந்தச் சின்னஞ்சிறு நாடு !

" ஜப்பான் பெரிய நாடா? அதுவும் ஏராளமான நாடுகளைக் கட்டி ஆண்டதே !

" பண்டைய கிரீஸ் நாடு என்ன பெரிதா? ரோம் ஒரு நகரம்தானே? ஒரு பெரிய சாம்ராஜ்யமாக விளங்கவில்லையா அது, ஒருகாலத்தில் ! ஒரு நாட்டின் பெருமை அந்த நாட்டின் அளவைப் பொறுத்தது அல்லவே ! அதன் தரத்தைப் பொறுத்ததுதானே !

" தமிழ் நாட்டின் தரம் என்ன குறைந்து போய்விட்டது? எதற்காக இன்னொரு மாநிலத்துடன் இணைந்து தட்சிண இராஜ்யம் அமைப்பது?

" ஏதோ பெரிய பொருளாதார நன்மைகள் கிடைக்கும் என்று கனம் நிதிமந்திரி கூறினார்.

" நான் கூறினேன்—ஒரு மனிதனுக்கு சாப்பாடு மட்டும் போதுமானதல்ல ; இலட்சியமும் வேண்டும் என்று ஏசுநாதர் கூறியிருக்கிறார்—என்று !

" உடனே மந்திரிக்குக் கோபம் வந்துவிட்டது — ' உங்களுக்கு உணவு கிடைக்கலாம் ; உணவு இல்லாதவன் — கிடைக்காதவன் என்ன செய்வது ? —என்று கோபமாகக் கேட்டார்.

" நான் கூறியதை, அவர் சரியாகப் புரிந்துகொள்ளாமலேயே பேசினார்: சாப்பாடு மட்டும் போதுமானதல்ல என்றுதான் நான் கூறினேனே தவிர, சாப்பாடு வேண்டாம் என்று நான் கூறவில்லை.

" தமிழ் மக்கள் இன்று தங்களின் பழம் பெருமையை உணர்ந்திருக்கிறார்கள் ; அந்தப் பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறார்கள் ; அதற்காக, தங்கள் மொழி வழங்குகிற பகுதிகளைக் கொண்ட தமிழ் மாநிலம் வேண்டும் என்று கேட்கிறார்கள் ; இதில் என்ன தவறு ?

" தேவிகுளம்—பீர்மேடு முதலிய எல்லைப் பகுதிகள் தமிழ் நாட்டிற்கு வேண்டுமென்று தீவிரமாகப் பேசிய நிதி மந்திரி சுப்பிரமணியம், பின்னர், அவை தமிழர்களுக்குக் கிடைக்காமற் போனதற்கு என்ன சமாதானம் கூறினார் ? ' இது மேலிட உத்திரவு ; நான் மேலிடத்திற்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும் ' என்றுதானே கூறினார் ?

" இவர் விசுவாசம் காட்டுவது எப்படியிருக்கிறது ? டெல்லியில் நேருவுக்கு—சென்னையில் ஆச்சாரியாருக்கு — சட்டசபையில் காமராசருக்கு என்று விசுவாசம் காட்டவேண்டியவரா யிருக்கும் இவர், மக்களுக்கு விசுவாசம் காட்டவேண்டும் என்று எண்ணக் காணோம் !

" நான் விசுவாசம் காட்ட வேண்டுமானால், அது மக்களுக்குத் தானே தவிர வேறு யாருக்கும் அல்ல !

" ' கடற்படை வீரனுக்கு எல்லாப் படகிலும் ஒரு பெண் இருப்பது வழக்கம் ' என்று பழமொழி கூறுவார்கள். அதுபோல, போகிற இடத்தில் எல்லாம் விசுவாசம் காட்டுவதற்கு, மக்களைத் தவிர சில மனிதர்கள், இந்த கனம் சுப்பிரமணியத்திற்கு இருக்கிறார்கள்.

" என்னால் விசுவாசம் காட்டப்பட வேண்டிய தலைவர்கள் மக்களே தவிர, வேறு எவரும் அல்ல !

" மக்கள் பெருமையுடன் விளங்குகிறார்கள் என்றால் அது எனக்கும் பெருமை தருவதாகும் ; தமிழ் மக்கள் தாழ்ந்துவிட்டார்கள் என்றால் அது எனக்கும் தாழ்வு தருவதாகும்.

ஆனால் கனம் சுப்பிரமணியம், எங்கெல்லாமோ இருப்பவர்களுக்கு ' லாயல்டி ' காட்டுபவராக இருக்கிறார் !

" தமிழ் மக்களுக்கு நியாய உணர்ச்சி உண்டு என்று நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். அந்த நியாய உணர்ச்சியை நீதி—நிதியமைச்சர் உணர்ந்ததாகத் தெரியவில்லை !

" தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்குத்தான் என்று தீவிரமாகப் பேசிவிட்டு, இப்போது, மேலிடம் கூறுகிறது என்று பேசுவது நேர்மையா என்று கேட்டேன்; அதற்குப் பதில்தர முற்பட்ட அமைச்சர் தான், 'ஒழுங்கு'பற்றிக் கேட்டதற்கு, 'விசுவாசம்'பற்றி பதில் தந்தார். 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பார்களே, நாம் அதைத்தானே அவரிடம் காண முடிகிறது, அவரது பதில் மூலம் !

" நான் அவரது போக்கு குறித்துக் கேள்வி கேட்டதற்காக—தமிழ் மக்கள், சர்க்காரின் நேர்மையற்ற போக்கைக் குறித்து என்ன கருதுகிறார்கள் என்பதை எடுத்துரைத்ததற்காக, கனம் மந்திரியார், என்னைப் போன்றவர்களை வேறு நாடாக இருந்தால் சகித்துக் கொள்ளமாட்டார்கள் என்றும், இவர்கள்தான் எங்களை சகித்துக் கொள்வதாயும், வேறு நாடாக இருந்தால் ஒழித்துக்கட்டியிருப்பார்கள் என்றும் இவர் பேசினார்; ஏன், துணிவிருந்தால் செய்துதான் பார்க்கட்டுமே ! எங்களை ஒழித்துக் கட்டட்டுமே !

" பிரிட்டிஷார் யுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களுடன் நாங்கள் ஒத்துழைத்ததைச் சுட்டிக்காட்டி, பிரிட்டிஷாருக்கு நாங்கள் வால்பிடித்தோம் என்று கனம் நிதி—நீதி அமைச்சர் கூறினார் ; சமீபத்தில், மதுரைக் கூட்டம் ஒன்றிலும் இதையே இவர் பேசியிருக்கிறார்.

" யுத்தத்தின்போது, பிரிட்டிஷாருடன் நாங்கள் ஒத்துழைத்தது என்பது இரகசியமானது எதுவுமல்ல; ஒளிவுமறைவின்றி பகிரங்கமாகவே வேலை செய்தோம் ; அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

" ஒன்று, யுத்தத்தில் பிரிட்டிஷார் தோற்றுப்போயிருந்தால், நாமெல்லாம் ஜெர்மனிக்கோ, ஜப்பானுக்கோ அடிமைப்பட்டிருப்போம். ஜெர்மனியோ, ஜப்பானோ நிச்சயம் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கமாட்டா என்பதுடன், பிரிட்டிஷாரை விட மிகக் கொடுமையான ஆதிபத்தியவாதிகள் என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. எனவே, ஜப்பான், ஜெர்மனிக்கு எதிராகப் பிரிட்டன் முதலிய நாடுகள் வெற்றி பெறுவதையே நாங்கள் விரும்பினோம்.

" இரண்டாவதாக, நம் நாட்டு இளைஞர்கள் எல்லாம் யுத்த காலத்தில் படையில் சேர்ந்து, இராணுவப் பயிற்சி பெறுவார்களேயானால், யுத்தம் முடிந்த பிறகு, வெள்ளைக்காரர்கள் சுதந்திரம் வழங்க மறுத்தால், அவர்களை விரட்டப் பயிற்சி பெற்ற இளைஞர்களை—இராணுவ வீரர்களைப் பயன்படுத்தலாம் என்றும் நாங்கள் கருதினோம். அதனால்தான், அவர்களுடன் யுத்தக் காலத்தில் ஒத்துழைத்தோம். இந்தக் காரணங்களை, மக்களிடத்தில் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறிவிட்டுத்தான் செயல்பட்டோம்.

' இதனை துரோகம் என்று, கனம் நிதி—நீதி அமைச்சர் வர்ணிக்கிறார். சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிய வீரர்கள் என்று தங்களை வர்ணித்துக்கொள்ளும் இவர்கள், எங்களை பிரிட்டிஷாருக்கு வால் பிடித்ததாகக் கூறுகிறார்கள். யார் வால் பிடித்தார்கள் ? சுதந்திரம் பெற்ற பிறகு இந்த மகானுபாவர்கள்தானே இப்போது இந்தியா வந்த மவுண்ட்பாட்டனுக்கு வரவேற்பும் வாழ்த்தும் கூறினார்கள் ? நாங்களா பிரிட்டிஷ் இராணுவத் தளபதியான அவருக்கு மாலை மரியாதை செய்தோம். கூறுவார்களா ? காங்கிரசார் தானே—இந்த மந்திரிகளாயுள்ள பெரிய மனிதர்கள் தானே மவுண்ட்பாட்டனை வாழ்த்தி வரவேற்று உபசரித்தார்கள். இவர்களே தான் எங்களை, ' பிரிட்டிஷாரின் பாதந்தாங்கிகள் ' என்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

" எங்களை இவர்கள் சகித்துக் கொள்கிறார்களாம் ; வேறெவராயுமிருந்தால் சகித்துக்கொள்ள மாட்டார்களாம்.

" 1951-ல், காங்கிரஸ் படுதோல்வியடைந்தபோது மந்திரிசபை அமைக்கத் திண்டாடினார்கள் ; ஆள் கிடைக்காமல் அலைந்தார்கள் ; பின்பு ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த இராசகோபாலாச்சாரியாரை அழைத்துவந்து மந்திரியாக்கினார்கள் ; அவர் பதவி ஏற்றதும், ஆச்சாரியாரை நான் பாராட்டினேன். காரணம், நிர்வாகம் சீர்குலைந்து கிடக்கிறது ; அந்த அலங்கோலத்தை அனுபவம் பெற்ற ஆச்சாரியார் சீர்செய்ய வேண்டும் ; அதற்காக அவர் பத

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

திருச்சியில் மே 17, 18, 19, 20-ல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள

"வள்ளுவர் நகரில்"

நடைபெறும்

★

தலைவர் : இரா. நெடுஞ்செழியன்

திறப்பாளர் : ஜி. பி. சோமசுந்தரம்

வரவேற்புக் குழுத் தலைவர் : ஏ. பி. தருமலிங்கம்

★

கலை விருந்து அளிப்போர் :

என். எஸ். கிருஷ்ணன்	கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்	நாகூர் அனிபா
எஸ். எஸ். இராஜேந்திரன்	ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	பி. எஸ். செல்வா

திருவாடுதுறை டி. என். இராசரத்தினம்

★

கருத்து விருந்து அளிப்போர் :

அண்ணா

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்	என். எஸ். இளங்கோ
கே. ஏ. மதியழகன்	மு. கருணாநிதி	கா. அப்பாத்துரை
க. அன்பழகன்	சி. பி. சிற்றரசு	அரங்கண்ணல்
கண்ணதாசன்	டி. கே. சீனிவாசன்	ப. உ. சண்முகம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	சத்தியவாணி முத்து	அ. பொன்னம்பலனார்
கி. மனோகரன்	தில்லை வில்லாளன்	கே. வி. கே. சாமி
காஞ்சி கல்யாணசுந்தரம்	கே. கே. நீலமேகம்	எம். பி. சுப்பிரமணியம்
அருண்மொழி	ஏ. கோவிந்தசாமி	இரா. சு. தங்கப்பழம்
ஆர். எஸ். பாண்டியன்	எம். எஸ். இராமசாமி	அலமேலு அப்பாத்துரை

★

மாநாட்டுக் கட்டணம் :

நான்கு நாட்களுக்கும் சேர்த்து :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0
2-ம் பிரிவு	,,	5—0—0	2—8—0
3-ம் பிரிவு	,,	3—0—0	1—8—0

தனித்தனி ஒவ்வொரு நாளும் :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
2-ம் பிரிவு	,,	1—8—0	0-12—0
3-ம் பிரிவு	,,	1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி கட்டணம் (நுழைவு உட்பட) : ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாதோர் வரவேற்புக் குழுக் கட்டணம் : ,, 25—0—0

—மாநாட்டு விளம்பரக் குழு

நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு:

" திருச்சியில் நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டைப் பற்றி கீழ்க்கண்ட முறைகளில், உடனடியாக மூலைமுடுக்குகளில் எல்லாம் விளம்பரம் செய்ய வேண்டும் :—

1. 'நம் நாடு' இதழில் மாநாடு பற்றி வரும் அறிக்கைகளை துண்டு வெளியீடுகளாக அச்சடித்துப் பரப்ப வேண்டும்.
2. 'புறப்படுங்கள், திருச்சிக்கு—மே 17, 18, 19, 20 தேதிகளில் நடைபெறும் தி. மு. கழக மாநாட்டிற்கு'—இவ்விதமாக சுவர்களில் அச்சு எழுத்துக்களில் எழுத வேண்டும் ;
3. 'நம் நாடு' இதழில் வெளிவரும் அறிக்கையை பெரிய தட்டிப் 'போர்டு'களில் எழுதி முச்சந்திகளில் வைக்க வேண்டும் ;
4. மாநாட்டிற்கு வரும் ஒவ்வொரு கிளைக் கழகமும் பெரிய கொடிகளும், ஊரின் பெயரைக்கொண்ட பெரிய நீளத் துணியும் கொண்வர வேண்டும் ;
5. மாவட்டத் தோழர்கள் அனைவரும் இங்கிருந்து புறப்படும்போது ஒரே வண்டியில் புறப்பட வேண்டும்.

" மாநில மாநாட்டிற்கு நமது மாவட்டத்திலிருந்து பத்தாயிரம் பேர்களாவது செல்ல வேண்டும்; அதற்காக தங்கள் தங்கள் பகுதிகளில் தோழர்களைத் திரட்ட வேண்டும்; அனேகமாகத் தனி இரயில் தூத்துக்குடியிலிருந்து புறப்படும். விவரம் பின்னர் தெரிவிக்கிறேன்,"

என்று, நெல்லை மாவட்டத் தி. மு கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அறிவிக்கிறார்.

'தேபர் பார்வை'யில்!

விருதுநகர், எப். 23—

" சென்னை மாநிலத்திற்கு நான் வரும்போதெல்லாம் தன் மனதை அதிகமாகக் கவர்ச்சிப்பது தமிழக மக்களின் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையே யாகும்"

என்று, காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் கூறியுள்ளார்.

சென்னை மாநில மக்கள் இந்தியாவின் பாமர மக்களை மிகவும் நெருங்கி விட்டனரென்றும், வடநாட்டில் ஏழைக்கும்—பணக்காரனுக்குமிடையேயுள்ள தூரம் இங்கில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் சபையை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது கைதாகியிருக்கின்றனர்.

பின்னர், சபையிலிருந்து 50 கெஜ தூரத்திற்கு அப்பால் மக்கள் சபை முன்பாக சுமார் 20 பேர் வரைகூடி நின்று, ஒரு மணி நேரத்திற்கு மேலாக 'பம்பாய் மராட்டியருக்கே' என்ற உரிமைக் குரலை எழுப்பியவண்ணமிருந்திருக்கின்றனர்.

பின்னர், இரு மக்கள் சபை உறுப்பினர்கள், தொண்டர்களைச் சந்தித்த பின், அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றிருக்கின்றனர்.

மராட்டியத்திலிருந்து டில்லிக்கு வந்து, மக்கள் சபையை 'முற்றுகை'யிடும் அளவிற்கு மராட்டியருக்கு இழைக்கப்பட்ட அநீதி; அவர்களுக்குக் கொதிப்பை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை அந்தி இழைத்த 'பெரிய மனிதர்'கள் உணர்கிறார்களோ, இல்லையோ தெரியவில்லை!

புயல் சேதப் பகுதிகளில் கழகப் பணி......

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ளரிடம் ஆடைகள் பெற்றனர். மதியம் 12 மணியளவில், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தோழர் மாரிமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் வாழும் சேரியில் துணி விநியோகம் நடந்தது. தோழர் மாரிமுத்து எம்.எல்.ஏ. பொதுச் செயலாளருடன் கலந்து பல நூறு மக்களுக்குத் துணி கொடுக்க ஏற்பாடு செய்தார்.

பின்னர் பேராவூரணி போகிற வழியில், துறவிக்காடு, ஒட்டங்காடு போன்ற இடங்களில் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு நல்ல புதிய ஆடைகள் பொதுச் செயலாளரால் விநியோகிக்கப் பட்டது. பேராவூரணி கழகத் தோழர்களிடம், சுற்றுப்பட்ட கிராமச் சேரிகளுக்கான ஆடைகள் தரப்பட்டது. பின்னர், பொதுச்செயலாளர் அவர்கள், சித்துக்காடு, ஆவணம், நெடுவாசல், கிரமங்கலம், பனங்குளம் முதலிய இடங்களில் துணி விநியோகம் செய்தார்.

இரவு 8-மணியளவில் அறந்தாங்கி வந்துசேர்ந்து அங்கு கழகத் தோழர்களைக் கண்டு உரையாடி மிகுதியாக இருந்த துணிகள் அனைத்தையும் அவர்களிடம் தந்து ஏழைகளுக்கு விநியோகிக்கும்படி கூறி பொதுச்செயலாளர் விடைபெற்றுக் கொண்டார்.

* * *

ஆடைகள் விநியோகத்திற்காக 'மோட்டார் வான்' தந்து உதவிய தஞ்சாவூர் 'வெண்சங்கு' எஸ். பெத்தண்ணன் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்வதாக மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

ரஷ்யா ஒன்றுதானாம்!

பர்மிங்காம், எப். 23—

" விமானத்திலிருந்து நீர்வளிக் குண்டை வெடித்துள்ள நாடு இதுவரையிலும் ரஷ்யா ஒன்று தான்" என ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் குருஷ்சேவ், பிரிட்டனில் கூறியுள்ளார்.

" தானே இயங்கும் 'ராக்கெட்' குறித்து வெகுவாகப் பேசப்படுகிறது ; அதில்கூட ரஷ்யா மற்ற நாடுகளைக் காட்டிலும் மிஞ்சிவிடும்; தானே இயங்கும் நீர்வளிக்குண்டை ரஷ்யா தயாரிக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

சென்னை 19-வது வட்ட செயற்குழு உறுப்பினர்கட்கு:

26—4—56 மாலை 6 மணியளவில், கழகப் பணிமனையில் கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், மாநில மாநாட்டுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தலும், மற்றும் பல முக்கிய பிரச்சினைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இளங்கோ தினமும்— புதுமனை புகு விழாவும்

25—4—56 இரவு 7-30 மணியளவில், திரு. வி. சுந்தரமூர்த்தி எம்.சி., அவர்கள் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்ச்சியில் தோழர் மு. க. தமிழ்த்தம்பி, மற்றும் பலர் பேசுவர்.

கழகக் கூட்டம்

★

மேட்டுநீரேத்தான்:

(சோழவந்தானுக்குச் சமீபம்)

27—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
சே. காசி

பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு
எஸ். முத்து
சமதர்மம்

★

புளியங்குளம்:

(வ. உ. சி. மைதானம்)

27—4—56 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:
கி. மனோகரன்
சே. அ. சைலாத்
கே. சேர்மத்துரை

★

நத்தம்:

(உளுத்துக்குப்பை கடைவீதி)

தி. மு. க. 4-வது ஆண்டு விழா

26—4—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
ஏ. ஆரோக்கியசாமி

பேசுவோர்:
அறிவுடைநம்பி
மணியரசு

ப. உ. சண்முகம்

சுற்றுப்பயணம்

ஏப். 28 : அரும்பாக்கம்
29 : அடியண்ணாமலை
30 : தேவனாம்பட்டு

நீதிக்கு வரலாறு கண்ட தமிழகத்தில்...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வியிலமர்ந்திருப்பது நல்லதே என்பதால் பாராட்டினேன். அப்போது, இதே கனம் சுப்பிரமணியமும் அருகில் அமர்ந்திருந்தார்.

" அப்போது கூறுவதுதானே—'நீ ஒரு துரோகி; உன் ஆதரவு எங்கள் ஆச்சாரியாருக்கு வேண்டாம்'—என்று! ஏன் கூறவில்லை, கனம் சுப்பிரமணியம்? அதுமட்டுமல்ல—என்னை மந்திரியாக்கிவிடக் கூட முயற்சித்தார்கள்; நான் தானே மறுத்தேன்!

" அவர்களுக்குப் பிடித்தால், அப்போது நல்லவன்; அவர்களுக்குப் பிடிக்காவிட்டால் துரோகி; இப்படி நடந்துகொள்பவர்களை—பேசுபவர்களை நாம் என்னவென்று பெயரிட்டு அழைப்பது?

" இப்படியெல்லாம், ஜனநாயக சபையில் கேவலமாகப் பேசுவது மந்திரிகளாயிருப்போருக்கு அழகல்ல!

" கனம் சுப்பிரமணியம் என்னை மரியாதையாக நடத்துவதினால், நான் ஒன்றும் ஒரு அடி உயர்ந்து விடமாட்டேன். அதேபோல், அவர் கேவலமாகப் பேசுவதினால், ஒரு அடி தாழ்ந்துவிடவும் மாட்டேன். என்னை மதிக்கவோ, கேவலப்படுத்தவோ தகுதி படைத்தவர்கள் மக்கள் தானே தவிர, மந்திரி சுப்பிரமணியம் அல்ல!

" மக்களை வேண்டாம் என்று கூறிவிட்டு, 'மேலிடம்தான் எனக்கு வேண்டும்' என்று கூறும் மந்திரி, எங்களை 'தென்னங்கன்று வைத்து விடுவேன்' என்று கூறுகிறார்; அவருக்குப் புரியும்—தென்னம்பிள்ளை வைத்தல் என்றால் என்ன—என்று!

" எங்களூர் பக்கம் (மதுரை மாவட்டம்) எவரையாவது விரோதிகளை ஒழிக்கவேண்டுமென விரும்பினால், அவரை வெட்டி, குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அதன்மேல் ஒரு தென்னங்கன்றை வைத்துவிடுவார்கள். ஒரு விரோதியை ஒழிப்பதற்கு, 'தென்னங்கன்று வைத்தல்' என்று கூறுவார்கள். அதைத்தான் செய்யப்போவதாக இந்த நீதி—நீதி மந்திரி சுப்பிரமணியம் சொல்கிறார்

" 'மக்கள் வேண்டாம்; மேலிடம்தான் வேண்டுமென்கிறீர்களே, இது நீதியாகுமா?' என்று, கேட்டால், இந்த நீதி மந்திரி, 'உங்களை ஒழித்துவிடுவேன்' என்று பேசுகிறார். இது எப்படிப்பட்ட நீதி பார்த்தீர்களா?

" தமிழ் நாட்டில் நீதிபற்றிய நல்ல வரலாறுகள் உண்டு. கோவலனைக் கொன்றது குற்றம் என்று கண்டதும், நீதி வழங்கும் மன்னன் மறைந்தான்; அவனது மனைவியும் மாண்டனள்—என்பது, நீதிக்குச் சிறந்த வரலாறாகும். அத்தகு சிறப்பைக் கொண்ட தமிழகத்தில்தான், குற்றத்தை எடுத்துக் காட்டிடுவோர்மீது சீறிவிழும் மந்திரிகள் இருக்கிறார்கள்!

" தமிழர் நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள்; ஆனால், நீதி மந்திரியாக இருக்கும் சுப்பிரமணியமோ, நம்மை தென்னங்கண்ணு வைத்து விடுவேன் என்று பேசுகிறார்!

" நீதியமைச்சருக்கு, நம்மை ஒழித்துவிட வேண்டும் என்று ஆசை இருக்கிறது; ஆனால் தைரியமில்லை! துணிவிருந்தால் செய்துதான் பார்க்கட்டுமே!

" அர்த்தால் நடத்தினோம்; தமிழ் மக்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டார்கள். அர்த்தாலை நடத்தியவர்கள், அர்த்தால் அமைதியாக நடைபெற தமிழ் மக்களை நம்பினார்கள்; தமிழ் மக்கள் கைவிடவில்லை.

" இதை, நமது படிப்பமைச்சர் சுப்பிரமணியம், 'கான மயிலாட கண்டிருந்த வான்கோழி...' என்ற பாடலுக்கு ஒப்பவைத்துப் பேசியிருக்கிறார். யாரை மயில் என்றும், யாரை வான்கோழி என்றும் அவர் கருதிக்கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை; இந்த படிப்பமைச்சருக்கு, அந்தப் பாடலின் பொருள் முழுதும் தெரிந்திருந்தால், இப்படிக் கூறியிருக்கமாட்டார்.

" அர்த்தால் நாளன்று யார் முகத்தில் தமிழ் மக்கள் கரிபூசினார்கள்? அர்த்தாலை நடத்திய எங்கள் முகத்திலா, அல்லது அர்த்தாலை வேண்டாமென்று கூறிய சுப்பிரமணியம் முகத்திலா?

" தமிழ் மக்கள் கரி பூசினார்கள் என்றால், அதற்காக மந்திரி சுப்பிரமணியம், மக்கள் மீது கோபப்படட்டும்; 'ஏன் இப்படிச் செய்தீர்கள்' என்று கேட்கட்டும்; அதை விடுத்து, எடுத்ததற்கெல்லாம், எங்களைத் துரோகிகள் என்று கூறி வசை பாடுவதால் பயன் என்ன?

" அர்த்தாலுக்கு காமராசர் ஆதரவு தந்ததாலேதான் வெற்றிகரமாக நடைபெற்றது — என்று, சி. ஆர். வேறு, சட்டசபையில் பேசினார். 'மாநில சீரமைப்பு மசோதா வெளிவந்ததும், பலர் தங்களின் புத்திசாலித்தனத்தை இழந்துவிட்டனர்' என்று கூறினேன் அல்லவா? அவர்களில், எனது மதிப்பிற்குரிய ஆச்சாரியாரும், ஒருவராகி இருக்கிறார். அதனால்தான் அர்த்தால் பற்றி அப்படிப் பேசினார் போலும்!

" பிப். 20-ல் நடைபெற்றது போன்று; வேறு எப்போதும் வேறு எந்த ஒரு அர்த்தாலும் இது போன்று அமைதியாக நடைபெற்றதில்லை. சென்னை நகரிலிருந்து கன்னியாகுமரிவரை ஒரே நாளில் இத்தனை அமைதியாக அர்த்தால் நடைபெற்றது, அமைச்சர்களுக்கு ஆத்திரத்தைத் தந்திருக்கிறது போலும்! அந்த ஆத்திரத்தை எங்கள் மேல் காட்டுகிறார்கள்!

" மந்திரிகள், ஒரு ஜனநாயக அமைப்பில் அரசியல் கட்சிகள் என்றமுறையில் அவற்றிற்கு தர வேண்டியமதிப்பையும்மரியாதையையும்தரமறந்துவிடக்கூடாது. எதைப்பேசினாலும், என்னபேசினாலும்பொறுப்புஉணர்ந்து ஜாக்கிரதையாகப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும், காங்கிரஸ் மந்திரிகள்!

" நிதி-நீதி அமைச்சர், பரம்பரை பற்றி வேறு பேசியிருக்கிறார். நாங்கள் மக்களின் சேவைக்காக, மக்களுக்கு வேலை செய்வதற்காக மந்திரிகளாயிருந்த பரம்பரையினர் என்பதை அவர் நினைவில் கொள்ளவேண்டும். இவர் சற்று அடக்கத்துடன் பேசக் கற்றுக் கொள்வது, அவர் வளர வழி கோலுவதாக அமையும் என்று கூற விரும்புகிறேன். இவர் பேசிவிடுகிற பரம்பரை பற்றி நான் ஏதாவது பேசினால், என்னைத் தான் நாட்டவர் கோபிப்பர்!"

'நேசக் கரம் நீட்டத் தயார்'

பாகிஸ்தானுடன் உறவு குறித்து நேரு அறிவிப்பு

" இந்தியா — பாகிஸ்தானுடன் நல்லதொரு அண்டைநாடாகவே வாழ விரும்புகிறது; எப்போதும் 'நேசக்கரம்' நீட்டத் தயாராகவே உள்ளது,"

என்று, இந்தியப் பிரதமர் நேரு தெரிவித்திருக்கிறார்.

" இப்போது இரு நாடுகளிடையேயும் ஏற்பட்டுள்ள பிணக்குகள் மேலும் வலுப்பெறும்படி, இந்தியா எதுவும் செய்யாது. ஆனால் அதே போது, தனது உரிமைகளையும் விட்டுக்கொடுக்க இயலாது" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் விவகாரத்தை ஒட்டி, இரு நாடுகளிடையேயும் தகராறு நீடிப்பது வருந்தற்குரியதே என்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறாராம்.

★

இராணுவம் குவிகிறதாம்!

புதுடில்லி, எப். 23—

'மேற்கு பாகிஸ்தான் எல்லையோரத்தில் பாகிஸ்தான் எல்லையோரத்தில் பாகிஸ்தான் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதாக டில்லி சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருக்கிறது' என, பிரதம மந்திரி நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து பாகிஸ்தான் சர்க்காருக்கு குறிப்பு அனுப்பியிருப்பதாயும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

★

'கவலை வேண்டாம்' என பண்டித பந்த் அபயம்

பாகிஸ்தான் முஸ்லீம் லீகர்கள் தங்கள் அறிக்கை ஒன்றில், புனிதப் போராட்டத்திற்கு மக்களைத் தயாராக இருக்கும்படி கோரியிருப்பதை இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், டெல்லி மக்கள் சபையில் குறிப்பிட்டு, அது குறித்து மக்கள் கவலைப்பட வேண்டாம் எனவும், அதனை அலட்சியப் படுத்திவிட்டு ஆக்க வேலைகளில் கவனம் செலுத்துமாறும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

★

'இந்தியா யுத்தத்தை விரும்பவில்லை; ஆனால்!

பாசில்கா (பாக்-இந்திய எல்லை) எப். 23—

" தன்னுடைய அண்டை நாட்டாருடன் இந்தியா சமாதான உறவுகொள்ளவே விரும்புகிறது; அவர்களுடன் எவ்வித சிறு தகராறுகளையோ, அல்லது பெரிய யுத்தத்தையோ விரும்பவில்லை; ஆனால், எவரேனும் தகராறு கிளப்பினாலோ அல்லது யுத்தம் தொடுத்தாலோ இந்தியா வாளாவிருக்காது. அப்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், துப்பாக்கியை எப்படி உபயோகிப்பது என்பதையும் இந்தியா அறிந்தே இருக்கிறது,"

என்று, தற்காப்பு இலாகா மந்திரி மகாவீர் தியாகி இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

வடக்கில் ஒரு தொழிற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியாக நிறுவப்படும் இத்தொழிற்சாலைக்கு சுமார் ரூ. 4½ கோடி செலவாகுமாம். 2,500 தொழிலாளருக்கு வேலை கிடைக்கும் எனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.